# மட்டக்களப்பில் பாரம்பரிய தோல் வாத்தியங்கள் உருவாக்கும் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

வடிவேல் இன்பமோகன்,
நுண் கலைத்துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
inpamohanv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

*தோல் வாத்தியங்கள் தமிழர் சமூகத்தின் அடிப்படையான பண்பாட்டு அடையாளமாகக் கொள்ளப்படுகின்றன. தமிழ் சமூகத்தின் வரலாற்றில் இவற்றின் பயில்வு நீண்ட தொடர்ச்சியைக் கொண்டதாகவுள்ளது. பாரம்பரிய தமிழ் சமூகத்தினரால் பயன்படுத்தப்பட்ட தோல்வாத்தியங்களின் நீட்சியை மட்டக்களப்பு தமிழ் மக்களினால் பயன்படுத்தப்படும் தோல்வாத்தியங்களில் கண்டுணரக் கூடியதாக உள்ளது. மத்தளம், உடுக்கு, பறை, கொட்டு, தப்பு போன்றன மட்டக்களப்பில் உருவாக்கப்படும் பிரதான தோல்வாத்தியங்களாக விளங்குகின்றன. மட்டக்களப்பில் இந்த தோல்வாத்தியங்கள் பாரம்பரிய கலை நிகழ்வுகள், சமூக நிகழ்வுகள் என்பவற்றில் பிரதானம் பெறுகின்றன. இவை மட்டக்களப்பில் உள்ள சுதேச கலைஞர்களினால் உருவாக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் உள்ளூர் பொருளாதார ஈட்டத்திற்கு வளஞ்சேர்ப்பதாக அமைவதுடன், தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்களின் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பிரதான இடம்பெறுகின்றது. பாரம்பரிய தோல்வாத்தியங்களை உருவாக்கும் கலைஞர்கள் சமகாலச் சமூகச் சூழலில் அத்தொழிலை மேற்கொள்வதில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த ஆய்வின் நோக்கமாக பாரம்பரிய தோல்வாத்தியங்களின் சமூக, பண்பாட்டு, பொருளாதார முக்கியத்துவத்தை அடையாளங்காணல், பாரம்பரிய தோல் வாத்தியக் கலைஞர் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காணல், அச்சவால்களுக்கான தீர்வுகளை முன்மொழிதல் என்பன அமைகின்றன. இவ்வாய்வு சமூகம் தொடர்பான ஓர் ஆய்வாக விளங்குவதால் பண்புசார் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படும். ஆய்வுக்கான தகவல்கள் பிரதான தகவல் வழங்கி, குழுநிலைக் கலந்துரையாடல், நேரடி அவதானிப்பு என்பனவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வாய்வின் மூலமாக பாரம்பரிய தோல்வாத்தியக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளும் முன்மொழியுப்படும். இது எதிர்காலத்தில் பாரம்பரிய கலைப்பயில்வுடன் தொடர்புடையவர்கள் அதனை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கான அடிப்படைகளை முன்மொழியும்.*

***திறவுச் சொற்கள்:*** *தோல் வாத்தியம், கலைத் தொழில், உள்ளூர் பொருளாதாரம், பிரபலக் கலைஞர், உள்ளூர்க் கலைஞர்.*

## 1. அறிமுகம்

மட்டக்களப்பில் பாரம்பரிய கலைவடிவங்களின் பயில்வு தனித்துவமான இடத்தைப் பெறுகின்றது. பாரம்பரிய கலை நிகழ்த்துகை ஊடாக அம்மக்களின் சமூக, பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படுகின்றன. இவை சமூகங்களின் ஒருமைப்பாட்டுடனும் பங்குபற்றலுடனும் மேற்கொள்ளப்படுகின்றன. பாரம்பரிய கலைச் செயற்பாட்டுடன் தொடர்புடைய பல கலைச் சேவையாளர்

மட்டக்களப்பின் பல பகுதியிலும் கலைச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களை கூத்துக்களை பயிற்றுவிக்கும் அண்ணாவிமார், கூத்துக்களுக்கான உடுப்பு, ஆயுதம், அலங்காரப் பொருட்களை உருவாக்கும் கலைஞர்கள் (மேஸ்திரிமார்), இந்துக் கோயில்களுக்காக வாகனம் செய்யும் கலைஞர்கள், சடங்குக் கோயில்களுக்காக ஆயுதம், முகக்களையை உருவாக்கும் கலைஞர்கள் என வகைப்படுத்திக் கொண்டு செல்லலாம். இக்கலைச் சேவையாளர்களில் ஒரு பகுதியினராகவே தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்களையும் அடையாளங்காணமுடிகிறது.
இக்கலைஞர்களால் உருவாக்கப்படும் தோல் வாத்தியங்களாக மத்தளம், உடுக்கு, பறை, கொட்டு, தம்பு என்பன அடையாளப்படுத்தத்தக்கன.

இத்தோல்வாத்தியக் கருவிகள் மட்டக்களப்பில் நிகழ்த்துகை செய்யப்படும் பாரம்பரிய நிகழ்த்து கலை வடிவங்களான வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, மகிடிக்கூத்து, பறைமேளக் கூத்து போன்றவற்றின் நிகழ்த்துகையில் பிரதான வாத்தியங்களாகப் பயன்படுத்தப்படுவதுடன் கோயிற் சடங்குகளிலும் இசைக்கப்படுகின்றன.

சித்தாண்டி, கன்னங்குடா, மகிழவெட்டுவான், களுதாவளை போன்ற கிராமங்களில் தோல்வாத்தியக் கருவிகளை உருவாக்கும் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் வாழ்கின்றனர். நவீன முறைமைகள், சாதனங்களை உள்வாங்காது பாரம்பரிய முறைப்படி வாத்தியங்களை உருவாக்குகின்றனர். தோல்வாத்தியக் கருவிகளின் உருவாக்கத்திற்கு மிருகங்களின் தோல், மரம் என்பனவற்றை அடிப்படையான மூலப் பொருட்களாகப் பயன்படுத்துகின்றனர். வாத்தியக் கருவி உருவாக்கத் திறனானது வாத்தியத்தை மீட்டும் போது எழுப்பப்படும் ஓசையின் ராகலயத்தின் கலைத்துவத்திலும் வாத்தியக் கருவியின் அழகிய தோற்றப் பொலிவிலும் தங்கியுள்ளது.

## 2. ஆய்வின் நோக்கம்

1. தமிழர் பண்பாட்டில் தோல்வாத்தியங்களின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல்
2. தோல்வாத்திய கருவி உருவாக்கும் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளங்காணல்
3. தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர் எதிர்கொள்ளும் சவால்களுக்கான தீர்வுகளை முன்மொழிதல்

## 3. ஆய்வு முறையியல்

இந்த ஆய்வின் மையப்பொருள் பாரம்பரிய தோல்வாத்தியக் கலைஞர் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்கள் வாழ்கின்றனர். அவர்களுள் ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுவர். இவ்வாய்வில் பண்புசார் (Qualitative Research Design) ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படுகிறது. கட்டமைப்பற்ற

நேர்காணல் (Unstructure Interview) தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினருடனான கலந்துரையாடல் (Focus Group Discussion) நேரடி அவதானிப்பு என்பன (Direct Observation) ஆய்வுக் கருவிகளாகப் (Research Tools) பயன்படுத்தப்படுகின்றன. பிரதான தகவல் வழங்கி (Key Informatory) பனிப்பந்து முறை (Snowball Method) என்பன மாதிரி நுட்பங்களாக (Sampling Technique) பயன்படுத்தப்படும். பண்புசார் அடிப்படையில் தகவல்கள் நுணுகி ஆராயப்பட்டு பரிந்துரைகளும் முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

## 4. கருத்துரையும் பெறுபேறும்

மட்டக்களப்பில் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியக் கருவிகள் மட்டக்களப்புத் தமிழரின் பண்பாட்டை அடையாளப்படுத்துவதில் முதன்மையானவையாக விளங்குகின்றன. இவ்வாத்தியங்களின் பிரசன்னம் பாரம்பரிய கூத்துவடிவங்கள், கோயிற் சடங்குகள், சமூக பண்பாட்டு நிகழ்வுகள் என்பவற்றில் தனியிடம் பெறுகின்றன. கோயிற் சடங்கில் உடுக்கு பறையின் முக்கியத்துவம், மரண வீட்டில் பறையின் ஒலி, பாரம்பரிய கூத்துகளில் மத்தளத்தில் பிரசன்னம் அதன் தாள விகார்சிப்பு என்பன, குறித்த நிகழ்வுகளுக்கு உயிர்ப்பை வழங்குகின்றன.

கூத்தில் மத்தளத்தின் தாளவிகார்சிப்பின் முக்கியத்துவத்தை வி.சீ.கந்தையா பின்வருமாறு விபரிக்கின்றார் ''வரவுக்கேற்றபடி தாளக்கட்டுக்களை அண்ணாவியாரும் பக்கப்பாட்டுக்காரரும் தொடர்ந்து சொல்லுகையில் அவர் கூற்றை அவ்வாறே மத்தளமும் தன்மொழியில் சொல்கிறது. அப்பொழுது உணர்ச்சியைக் கடந்த ஆட்டமானது கூத்துக்காரரை மேற்கொண்டு பார்ப்போரையும் பரவசப்படுத்தி விடுகின்றது. மத்தளத்தின் இந்த சிறப்பு நிலையை மக்கள் ''மத்தளம் நன்கு பேசுகின்றது'' என்று சொல்லி அனுபவித்து மகிழ்கின்றார்கள்'' (1964:56). நிகழ்வுகளின் சமூக, பண்பாட்டு, கலைத்துவ முக்கியத்துவம் தோல்வாத்தியக் கருவிகளின் பிரசன்னத்திலும், இசையின் விகாசிப்பிலும் சார்ந்திருக்கின்றது. இவ்வாத்தியங்களின் ஒலிச் சமிக்கையும் பிரசன்னமும் மட்டக்களப்புத் தமிழரின் சமூக நிகழ்வுகளினதும் கலை நிகழ்வுகளினதும் குறியீடாகவும் பண்பாட்டு அடையாளப்படுத்தலாகவும் அமைந்து அந்நிகழ்வுகளுடன் மக்களை ஒன்றிணைத்து வழிப்படுத்துவதாகவும், அந்நிகழ்வுகளுக்கு உயிர்ப்பை வழங்குவதாகவும் விளங்கின. இத்தோல் வாத்தியக் கருவிகளுக்கு மட்டக்களப்பு தமிழரின் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துவதிலும் அடையாளப் படுத்துவதிலும் எப்போதும் ஒரு தனித்துவமான இடம் இருக்கின்றது. மட்டக்களப்பின் பாரம்பரிய நிகழ்த்துகை மரபை உயர்நிலையில் பேணுவதில் அல்லது அதன் கலைத்துவ அழகியல் தராதரத்தைப் பேணுவதில் தோல்வாத்தியக்கருவிகளின் இடம் முக்கியமானதாகவே இருந்துவருகின்றது.

பண்டைத் தமிழரினால் பயன்படுத்தப்பட்ட தோல்வாத்தியங்களுக்கும் மட்டக்களப்பில் இன்றுவரை பயன்படுத்தப்படும் தோல்வாத்தியங்களுக்கும் இடையே ஒரு

பிணைப்பு உள்ளதை பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கருத்துக்கள் எடுத்தியம்பும் (2004:221). இதன்மூலம் மட்டக்களப்பு தமிழ் மக்களிடம் பயில்வில் உள்ள தோல்வாத்தியங்கள் தமிழ் பண்பாட்டில் காலம் காலமாகப் பயன்படுத்துவந்த தோல்வாத்தியங்களின் நீட்சியாக விளங்குகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

நவீன அறிவியல் சூழல் பாரம்பரிய மரபுகள் விடயங்கள் இருந்த இடத்தில் புதிய விடயங்களின் பயன்பாட்டிற்கும் வரவிற்கும் இடமளித்துள்ளது. இது எமது உணவுப்பழக்கம், ஆடைக்கலாசாரம், வழிபாட்டுமுறை, நம்பிக்கைகள், கலைச் செயற்பாடுகள் என எல்லாவற்றிலும் புதிய விடயங்களை வைத்துப் பார்க்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. இந்நிலைமைகளுக்குள் இருந்துகொண்டு பண்பாட்டு பற்றுறுதியுடன் மரபுகளைப் பேணும் வேட்கை கொண்ட சமூகங்கள் தமது பாரம்பரிய மரபுகளைப் பேணுவதன் ஊடாக தமது பண்பாட்டு அடயாளங்களைப் பாதுகாக்க முயல்கின்றன.

புதிய வாழ்வியல் சூழலில் சிக்கியுள்ள பாரம்பரிய வாத்தியக்கருவி உருவாக்கும் கலைஞர் தங்கள் அடையாளத்தை பாதுகாக்கும் நோக்குடன் கலைத் தொழிலை மேற்கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர். வாழ்வாதாரம், கலையுற்பத்தி, சந்தைப்படுத்தல், பயில்வு என அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வகைப்படுத்தி நோக்கலாம். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம்காணல் குறித்த பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு அவர்களின் கலைத்தொழிலை முன்னெடுப்பதற்கான உபாயங்களைக் கண்டறிய உதவும்.

பாரம்பரிய தோல்வாத்தியக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அவர்களின் கலைச் சேவையை பெற்றுக்கொள்ளல் தொடர்பான நிலையில் சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தினர், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் தோல்வாத்திய கருவி உருவாக்கும் கலைஞர்களுடனான சந்திப்புக்களுக்கும்
கலந்துரையாடல்களுக்கும் உரிய தளங்களை அமைத்திருந்தனர். அமரத்துவம் அடைந்த திரு சிறிதான், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிலைய விரிவுரையாளர் இவ்விடயப் பொருள் தொடர்பான விடயங்களுக்கு அவரின் முதுதத்துவமானிப் பட்டத்திற்கான ஆய்வில் முக்கியத்துவம் அளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## 5. தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர் எதிர்கொள்ளும் சவால்கள்

பாரம்பரியக் கலைகளும், அவற்றின் பயில்வும் மக்கள் வாழ்வியலின் ஒரு பகுதியாக ஆரம்பகாலங்களில் பிணைக்கப்பட்டிருந்தன. இவை மக்களின் சமூக, பொருளாதாரச் செயற்பாடுகளுடன் தொடர்புடையனவாக விளங்கின. புதிய வாழ்வியல் சூழல் மக்கள் வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக பாரம்பரிய பொருளாதார ஈட்டம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆரம்பகால மக்களின் வாழ்வியல் நோக்கு அதன் அடியான வாழ்வியல் தேவைகள்

என்பனவற்றில் இருந்து நவீன சூழலில் மாற்றம் அடைகின்றது. இந்நோக்கு நிலை பாரம்பரிய கலைப்பயில்வுடன் தொடர்புடைய மக்களின் ஈடுபாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்புதிய சூழலில் பாரம்பரிய தோல்வாத்தியக் கருவிகளை உருவாக்கும் கலைஞர் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குகின்றனர். அவற்றை அடையாளப்படுத்தல் இங்கு அடிப்படையானது.

### 6. கலைத் தொழிலும் வாழ்வாதாரமும்

பாரம்பரிய தோல்வாத்தியக் கருவிகளை உருவாக்கும் கலைஞர்கள் மட்டக்களப்பில் வாழும் சுதேச கலைஞர்களில் ஒருபகுதியினராகும். மட்டக்களப்பில் பல பகுதியிலும் வாழும் சுதேச கலைஞர்களின் வாழ்க்கைத்தரம் வறுமைக் கோட்டிற்கு கீழ் நிலையிலேயே உள்ளது. கலையுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக அவர்கள் கூடுதலான உழைப்பைச் செலவிடுகின்றனர். இருந்தும் அவர்கள் செலவிடும் உழைப்பிற்கேற்ற ஊதியத்தை அவர்களால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. சுதேச கலைஞர்களின் வாழ்வில் வறுமை பொதுவானதொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது (Marcie Rendon., 2009:07). அவர்களின் வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வருவாயைப் பெற்றுக்கொள்வது சுதேச கலைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சிகைளில் பிரதானமானதாக விளங்குகின்றது.

பிரபல்யக் கலைஞர்கள் (Popular Artist) சமூகத்தில் மதிக்கப்படும் அளவிற்கு சுதேச கலைஞர்கள் மதிக்கப்படுவதில்லை. பிரபல்யக் கலைகள் (Popular Artist) சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களின் நுகர்வுக்கு உரியதாகவும் அவர்களின் அங்கிகாரத்தைப் பெற்றதாகவும் விளங்குவதால் பிரபல்யக் கலைஞர்களுக்கு அரச, கலை நிறுவனங்கள், சமூகம் என்பனவற்றின் ஆதரவும் உதவிகளும் கிடைக்கின்றது. இதனால் அவர்களின் வாழ்வியலை உயர்நிலையில் பேணக்கூடியதாக உள்ளது. சுதேச கலைஞர்களுக்கு அவர்கள் உழைப்புக்காக கிடைக்கும் ஊதியத்தைத் தவிர வேறு உதவிகள் எவையும் கிடைப்பதில்லை.

கலைச் தொழிலால் அவர்கள் அடையும் வருமானம் அவர்களின் வாழ்வாதாரதத்திற்கு போதுமானதாக அமைவதில்லை. இதனால் கலைச் செயற்பாடுகளில் ஈடுபடும் சுதேச கலைஞர்கள் கலைத் தொழிலை அவர்களின் வாழ்வாதாரத்திற்கான தொழிலாகக் நம்பியிருப்பதில்லை. விவசாயம், சேனைப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, சடங்குக் கோயில் பூசாரி, தச்சுவேலை, கூலித்தொழில் போன்ற சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இத்தொழில்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலமே வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றர். இத் தொழில்களின் மூலம் கிடைக்கும் வருமானமும் அவர்களின் வாழ்வாதாரத்திற்குப் போதுமானதாக அமைவதில்லை (கதிர்காமன் இளையதம்பி, மகிழவெட்டுவான்).

சுதேச கலைஞர்களின் கலைத் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தை பிரதான

வருமான ஈட்டத்தின் ஒரு சிறு பகுதியை பூர்த்தி செய்யும் ஒன்றாகவே பயன்படுத்துகின்றனர். கலைத் தொழிலை அவர்களின் ஆத்ம திருத்திக்குரிய ஒன்றாகவும் தாம் வாழும் சமூகத்திற்கு புரியும் ஒரு சேவையாகவும் கருதுகின்றனர். (தம்பிமுத்து, க., சித்தாண்டி - 03).

சுதேச கலைஞர்கள் கல்வித் தரம் அரச தொழில்வாய்ப்பையோ, அன்றி உயர் வருமானத்தைத் தரக்கூடிய தொழில்களோ பெறக்கூடிய அளவிற்கு போதுமானதாக அமைவதில்லை. இதனால் நிரந்தரமான வருமானத்தை பெறக்கூடிய ஒரு தொழிலை பெற்றுக்கொள்வதென்பது கடினமாகதொரு விடயமாகவே உள்ளது.

சுதேச கலைஞர்களுக்கு பொதுவானதாகக் காணப்படும் இப்பிரச்சினைகள் தோல் வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்களின் வாழ்வியல் சூழலிலும் அடையாளங்கானக்கூடியது.

தோல்வாத்தியக் கருவி உருவாக்கமாகிய கலைத் தொழிலுடன் தொடர்பற்றதாகவே இக்கலைஞர்களினால் மேற்கொள்ளப்படும் பிரதான தொழில் முயற்சிகள் அமைந்துள்ளன. கலைத் தொழில் மற்றும் அவர்களின் பிரதான தொழில் என்னும் இரண்டையும் ஒன்றை ஒன்று பாதிக்காத விதத்தில் மேற்கொள்கின்றனர். பிரதான தொழில்களின் தன்மை அவற்றுக்கு முழுநேர உழைப்பையும் செலவிட வேண்டிய தேவையற்றதாக விளங்குகின்றது. பிரதான தொழிலில் கிடைக்கும் ஓய்வு நேரத்தை வாத்தியக் கருவி உருவாக்கத்தில் செலவிடுகின்றனர் (பாலிப்போடி லோகேஸ்வரன், மகிழவெட்டுவான்). பிரதான தொழிலும் கலைத்தொழிலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றனவாக விளங்குவதால் சில பிரதிகூலங்களும் ஏற்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் ஒரு ஓவியக் கலைஞர் தனது பிரதான தொழிலாக கலைக் கூடம் ஒன்றில் வேலை செய்து கொண்டு (Art Studio) பகுதிநேரத் தொழிலாக ஓவியச் செயற்பாட்டிலும் ஈடுபடுவார். இங்கு அவரின் கலைச் செயற்பாடும் வருமான ஈட்ட மூலமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக விளங்குவதால் அக்கலைஞர் தனது கலைத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும் ஆத்ம திருத்தியுடன் ஈடுபடுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இது கலைஞர்களின் திறன் விருத்திக்கு வழியேற்படுத்துகிறது. இவ்வாறானதொரு வாய்ப்பான சூழல் எமது கலைஞர்களுக்கு ஏற்படுத்தப்பட்டு இருப்பதில்லை.

கலைத் தொழிலை பிரதான வருமான ஈட்ட மூலமாக சுதேச கலைஞர்கள் கருதாததால் அதில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதற்கோ அதனை பெரியளவான தொழில்துறையாக வளர்த்தெடுப்பதற்கோ அவர்கள் முயற்சிப்பதில்லை. அவர்களை நாடிவரும் வாடிக்கையாளர்களின் தேவை, அவர்களின் சொந்தப் பாவனை என்பவற்றுக்கு தேவையான வாத்தியங்களை உருவாக்குவதுடன் அவர்களின் உற்பத்தியை வரையறை செய்கின்றனர்.

**7. சந்தைப்படுத்தல்**

வாத்தியக் கருவி உருவாக்குதலை சுதேச கலைஞர்கள் பகுதி நேரத் தொழிலாகவே

மேற்கொள்கின்றனர். இருந்தும் அவர்களின் பிரதான தொழிலைவிட கலைத்தொழிலிலேயே கூடுதலான ஆர்வம் காட்டுகின்றனர். கலைத் தொழிலுக்கு சிறந்த சந்தை வாய்ப்பு இல்லாமையினாலேயே அதனை பகுதிநேரத் தொழிலாக மேற்கொள்ளவேண்டிய நிற்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றனர். அவர்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருப்பார்களாயின் கலைத் தொழிலையே அவர்களின் முழுநேரத் தொழிலாக மேற்கொண்டிருப்பர் (முருகப்பர் கார்த்திகேசு, மகிழவெட்டுவான்).

இதற்கு சிங்கள சமூகத்தில் இருந்து ஒரு உதாரணத்தைக் காட்டக்கூடியதாக உள்ளது. அம்பலாங்கொடையில் முகமூடிக் கைத்தொழிலில் ஈடுபடும் ஆரியபாலா என்பவரும் அவரின் குடும்பத்தினரும் முகமூடி உற்பத்தியையும் அதன் விற்பனையையும், முகமூடி கண்காட்சிக் கூடத்தை உருவாக்கி அதனைப் பராமரிப்பதையும் அவர்களின் பிரதான தொழில் முயற்சியாக் மேற்கொண்டு வருகின்றனர். இச்சுதேச உற்பத்தி மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு நுகர்வோரின் மூலம் பெரும் தொகைப் பணத்தை இலபமாக ஈட்டுகின்றனர். இதனை முழுநேரத் தொழிலாக மேற்கொள்வதால் அதனை விருத்தி செய்வதற்கான பல்வேறு திட்டங்களையும் வகுத்துச் செயற்பட்டு வருகின்றனர் (தா.ஜனார்தனி, 2012:6-8). அவ்வாறான சந்தை வசதி தோல்வாத்தியக் கருவிகளை உருவாக்கும் சுதேச கலைஞர்களுக்குக் கிடைக்கவில்லை.

வாத்தியக் கருவி உருவாக்கத்தை சுதேச கலைஞர்கள் குடிசைக் கைத்தொழிலாகவே மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கான சந்தைவாய்ப்பு குறைவாக உள்ளதால் கொள்வனவாளர்களின் கேள்விக்கு பின்னரே உற்பத்தியை மேற்கொள்கின்றனர். அவ்வாறான கொள்வனவாளர்களும் குறைவாகவே காணப்படுகின்றனர். வாத்தியக் கருவிகளை உற்பத்தி செய்து சந்தையில் பேரம்பேசி விற்குமளவிற்கு இவர்களின் உற்பத்திகளுக்கான சந்தை ஆரோக்கியமானதாக அமைவதில்லை. இதனால் உற்பத்தியும் விற்பனையும் வீட்டுடன் வரையறுக்கப்படுகின்றது.

பெரியளவான விற்பனையாளர்கள் போன்று வியாபாரத்திற்கான நடைமுறைகளைப் பின்பற்றாததால், பெரியளவான கொள்வனவாளர்கள், நிறுவனங்கள் இவ்வுற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக விலைமனுக் கோரல் போன்ற நடைமுறைகளை இவர்களால் பின்பற்ற முடிவதில்லை. இதற்கு இவர்கள் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்களாக இல்லாதது ஒரு காரணமாகும்.

இவர்களின் உற்பத்தியை பாரம்பரிய கலை நிகழ்த்துகைகள், கோயிற் சடங்குகள் என்பவற்றுக்காக பயன்படுத்தப்படுவதை நோக்காகக் கொண்டே உற்பத்தி செய்கின்றனர். உற்பத்தியை இவ்வாறு வரையறுப்பதால் பாரியளவிலான விற்பனைச் சந்தையைப் பற்றியோ, விற்பனை நியமங்களைப் பற்றியோ சிந்திப்பதில்லை. இதனால் பெரியளவான கேள்வியை பூர்த்தி செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவர்களின் உற்பத்தியும் விற்பனைச் சந்தையும் சிறியதாக விளங்குவதால் பெரியளவான சமூத்தினதும் வர்த்தக சமூகத்தினதும் உதவிகளும் ஊக்குவிப்புக்களும் இவர்களுக்கு கிடைப்பதில்லை. பெரியளவான வருவாயை ஈட்டித்தருவனவாக இவர்களின் உற்பத்தித்துறை விளங்காமை வர்த்தக சமூகத்தின் பார்வை இவர்களின் உற்பத்திகள் மேல் செல்லாததற்கான காரணமாகும். வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்திருக்குமாயின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள், பண உதவிகள், உற்பத்திப் பொருட்களை நாட்டின் பல பாகத்திலும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கும். வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்களின் விற்பனைச் சந்தை வீழ்ச்சியுற்றுக் காணப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக சந்தைப்படுத்தலில் உள்ள குறைபாடுகள் விளங்குகின்றன.

இவர்களினால் உற்பத்தி செய்யப்படும் வாத்தியக் கருவிகள் நீண்ட காலப் பயன்பாட்டைக் கொண்டவை. நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் பாவிக்கப்படும். வாத்தியக் கருவிகளின் தோலினால் உருவாக்கப்படும் ஒலி எழுப்பும் பகுதிகள் சிதைவடையும் போது மாத்திரம் புதிய தோல்கள் இடப்பட்டு திருத்தியமைக்கப் படுகின்றன. புதிய பொருளின் உற்பத்தியை விட திருத்தங்களே பெரியளவில் மேற்கொள்ளப்படுகின்றன. தரமான உற்பத்தியும் அவற்றின் நீண்ட காலப் பாவனையும் இவர்களின் விற்பனைச் சந்தையைப் பாதிக்கும் மற்றுமொரு விடயமாகும்.

வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்களின் பிரதான தொழிலகள் கலைத் தொழிலுடன் தொடர்பற்றனவாக விளங்குவதால் சந்தைப்படுத்தலில் சில பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக சேனைப் பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களின் நிமிர்த்தம் வதிவிடத்தில் இருந்து பல கிலோ மீற்றர் தொலைவில் தங்கியிருந்து தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வரும் வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த நேரத்திற்குள் பொருட்களை வழங்குவதில் சில வேளைகளில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். கலைத் தொழிலுடன் தொடர்புடைய வதிவிடச் சூழலில் மேற்கொள்ளப்படும் தொழில்களாக பிரதான தொழில் முயற்சிகள் அமைந்திருக்குமாயின் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது.

### 8. மூலப்பொருட்கள்

தோல் கருவிகளின் உருவாக்கத்திற்கு ஆடு, மான், மரை, குரங்கு, உடும்பு என்னும் மிருகங்களின் தோல்கள் மற்றும் வேம்பு, பலா, ஈரப்பலா, விண்ணாங்கு, முதிரை என்னும் மரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. வாத்தியங்களை உருவாக்குவதற்கு தேவையான மரங்கள், மிருகங்களின் தோல்கள் என்பவற்றைப் பெறுவதிலும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

மரங்களைத் தெரிவுசெய்வதில் சில வரையறைகளைப் பின்பற்றுகின்றனர். மரங்கள் மக்கள் பேசிப் புழங்கும் இடங்கள், வாகனம் ஓசை கேட்கக் கூடிய இடங்கள் என மக்கள் வாழும் சூழலில் இருந்து பெறப்பட்ட வேண்டும் என்பது சுதேச கலைஞர்களின் பாரம்பரிய நம்பிக்கையாகும். அவ்வாறான இடங்களில் இருந்து பெறப்படும் மரங்களில் இருந்து உருவாக்கப்படும் வாத்தியக் கருவிகளே இனிமையான ஓசையை ஏற்படுத்தும் என்பது நம்பிக்கை (முருகப்பர் கார்த்திகேசு, மகிழவெட்டுவான்). மேற்குறித்த வரையறையுடன் பொருத்தமான பருமன், உயரம் உடைய மரத்தை பெறுவதில் சிரமம் உள்ளது. ஏனெனில் வாழ் மனைகளில் மக்கள் தேவைக்காக வளர்க்கும் மரங்களை வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்களுக்கு வழங்குவதற்கு பெரும்பாலான இடங்களில் மக்கள் விரும்புவதில்லை. பொருத்தமான மரத்தை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமத்தின் காரணமாகவே பறையை உருவாக்குவதற்கு பயன்படுத்தும் குத்திக்குப் பதிலாக தகரத்தைப் பயன்படுத்துவதாக ஒரு பறைமேளக் கூத்துக்கலைஞர் குறிப்பிட்டார் (ஐயம்பிள்ளை ஞானசேகரம், களுதாவளை – 04).

வாழ் மனைகளில் இருந்தோ பொது இடங்களில் இருந்தோ அரச அனுமதி இல்லாது மரத்தை வெட்டுவதற்கு சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை. இச்சட்ட நடைமுறையும் அவர்களுக்கு பொருத்தமான மரத்தை பெறுவதில் சிரமத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் வாத்தியக் கருவிகளின் ஒலி எழும்பும் பகுதிகள் மிருகங்களின் தோலினாலேயே உருவாக்கப்படுகின்றன. மிருகங்களின் தோல்களை சுதேச வேட்டையாடிகளிடம் இருந்தே பெற்றுக் கொள்கின்றனர். இது அரச அனுமதி இல்லாத சட்டவிரோதமான ஒரு முறையாகும். மரங்களைப் வெட்டுவது போன்று காட்டு மிருகங்களை வேட்டையாடுவது அரசாக்கத்தினால் தடை செய்யப்பட்டதொன்றாகவே விளங்குகின்றது. இது தொடர்பாக வன விலங்குகள் தாவரங்கள் உற்பத்திச் சட்டம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> “எந்த ஒரு நபரும் எந்தவொரு காட்டுப் பகுதியிலும் காட்டு மிருகங்களை வேட்டையாடவோ, துப்பாக்கியால் சுடவோ, கொல்லவோ அல்லது எடுத்துக்செல்லவோ அல்லது எந்தவொரு பறவை அல்லது ஊர்வனவற்றின் முட்டையை எடுத்துக் கொல்லலோ அல்லது அழிக்கவோ அல்லது எந்தவொரு பறவையினதும் கூட்டை அழிக்கவோ எடுத்துச் செல்லவோமுடியாது.”(Faunna and Flora Protection, Chapter 567, p: 298)

மேற்குறித்த சட்டவரையறை இலங்கையில் வேட்டையாடுதல் அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இலங்கை அரசாங்கம் அழிவடைந்து அருகிக்கொண்டு வரும் காட்டு விலங்குகளைப்

பாதுகாப்பதற்காகவே இவ்வாறான இறுக்கமான சட்டங்களை உருவாக்கியுள்ளது. இச்சட்டங்களுக்கமைய காட்டுவிலங்குகளை வேட்டையாடுவதும் மிருகங்களின் உடற்பாகங்களைப் பயன்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாக விளங்குகின்றது. இது தோல்வாத்தியங்களை உருவாக்கும் கலைஞர்களைப் பாதிக்கின்றது.

### 9. சமூக அடையாளம் தொடர்பான பிரச்சினை

பிறப்பால் ஒவ்வொரு சமூக உறுப்பினர்களும் சமூகத்தில் உயர்ந்தவர், தாழ்ந்தவராக அடையாளம் காணப்படுகின்றனர். இச்சமூக அடையாளம் தொடர்பான பிரச்சினை தோல்வாத்திய கருவி உருவாக்கும் பிரிவினரில் சிலரைப் பாதிப்பதாக உள்ளது. இதனால் கூடுதலானளவு பறையர் சமூகத்தினரே பாதிக்கப்படுகின்றனர். 'பறை' பறையர் சமூகத்திற்குரிய தனித்துவமான வாத்தியமாகும். பறையர் சமூகத்தினர் வெளிப்படையாக உணரும் சமூகவேறுபாட்டு உணர்வால் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு சமூகமாக அடையாளம் காணப்படுகின்றனர். பறையருக்கு எதிரான சமூகவேறுபாட்டை வெளிப்படுத்தும் சமூகங்களுக்காக பறையடித்தலை பிரதான தொழிலாக / குலத்தொழிலாகக் கொண்டவர்கள். சமூக வேறுபாட்டு உணர்வு, அதனால் தனிமைப்படுத்தப்பட்ட சமூகமாக இனங்காணல் என்பவற்றால் சமகாலத்தில் பறையடித்தலை பிரதான தொழிலாக முன்னெடுக்க விரும்புவதில்லை. பறையடித்தலை தவிர்த்து ஏனைய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்வாதாரத்திற்கான வருவாயை ஈட்டிக் கொள்ள முயற்சிக்கின்றனர். பறையர் சமூகத்தின் மூத்த உறுப்பினர்களே குலத்தொழிலை மேற்கொள்கின்றனர். இளந்தலைமுறையினரை குலத்தொழிலில் ஈடுபடுத்த விரும்புவதில்லை. அவ்வாறு ஈடுபடுத்த விரும்பினாலும் இளைய உறுப்பினர்கள் அதற்குத் தயாராகவில்லை. அவர்களின் குலத் தொழிலான பறையுருவாக்கமும் பறையடித்தலுமே அவர்களை ஏனைய சமூகங்களில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட இனமாக அடையாளங்காட்டுகின்றது எனக் கருதுகின்றனர் (ஐயம்பிள்ளை ஞானசேகரம், களுதாவளை – 04).

சமகாலத்தில் குல அடையாளத்தை பேணுவதில் ஆர்வமுடைய, ஏனைய தொழில்களில் ஈடுபட விருப்பமற்ற, குறிப்பிட்ட சில உறுப்பினர்களே பறையடித்தலை மேற்கொள்கின்றனர். இருந்தும் பறையர் சமூகத்தினர் வாழ்வாதாரத்தினை ஈட்டுவதற்கான ஒரு கருவியாக பறையை நம்பியிருந்த காலத்தில் பறை பெற்ற முக்கியத்துவத்தை சமகாலத்தில் பெறுவதில்லை.

ஆரம்பகாலத்தில் உருவாக்கிய பறைகளைப் போல் அதிக பறைகளை உருவாக்க வேண்டிய தேவை சமகாலத்தில் இல்லாது போகின்றது. அத்துடன் சமகாலத்தில் உருவாக்கப்படும் பறைகளின் கலைத்துவ, அழகியல் அம்சங்களின் தரத்திலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் மரக்குற்றியைப் பயன்படுத்தி பறையை உருவாக்கினர். ஆனால் சமகாலத்தில் மரத்திற்குப் பதிலாக தகரத்தை பயன்படுத்தி பறையை உற்பத்தி

செய்கின்றனர். மரத்தால் பறையை உருவாக்கும் போது மரத்தில் பல அலங்கார வடிவங்களை செதுக்கி பறையை அழகிய தோற்றமுடையதாக வடிவமைத்திருந்தனர். தகரத்தில் அவ்வாறான அலங்கார வடிவங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லாதிருந்தது. (பரசுராமன், கா, களுதாவளை – 04). பறைக்கு வளங்கப்பட்ட முக்கியத்துவம் குறைந்தமையால் ஏற்பட்ட மாற்றங்களாகவே இவற்றைக் குறிப்பிட வேண்டும்.

வாழ்வாதாரத்திற்கான தொழிலாக பறை விளங்கியபோது பறையை அவர்களின் சமூக அடையாளமாகக் கருதி அவர்களின் சமூகத்திற்கு என்று இருக்கும் கலைப் பாணியையும் பயில்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு முதன்மையிடம் வழங்கினர். சமகாலத்தில் அவர்களின் கலைமரபைப் பின்பற்றுவதற்கோ அதனை வெளிப்படுத்துவதற்கோ அதிகமான சமூக உறுப்பினர்கள் விரும்புவதில்லை. (Marcie Rendon., 2009 : 11). இவ்வடிப்படையில் பறையர் சமூகத்தினர் உணரப்படும் சமூக சமூக சமூக வேறுபாட்டு உணர்வு பறை உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏனைய வாத்தியக்கருவிகள் மட்டக்களப்பு மேல்நிலையில் உள்ள சமூகங்களுடன் தொடர்புடையனவாக விளங்குவதால் பறையர் சமூகத்தினர் எதிர்நோக்கிய சமூக வேறுபாட்டு, சமூகத் தனிமைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் பாதிக்கவில்லை. இருந்தும் பிரபல்யக் கலைஞர்களுக்கு இருக்கும் முக்கியத்துவம், வாய்ப்பு, ஆதரவு என்பன இவர்களுக்குக் கிடைப்பதில்லை. சுதேச கலைஞர்களுக்கு அவர்கள் வாழும் சமூகங்களில் வழங்கப்படும் அங்கீகாரம் பரந்துபட்ட சமூகத்தால் இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. கலைஞர் சமூகங்களுக்குள் சுதேச கலைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்ட சமூகமாகவே உணர்கின்றனர். பரந்துபட்ட சமூகத்தின் பார்வை இவர்களின் மேல் செல்லாமையே இதற்கான காரணமாகும்.

**10. பயில்வு**

வாத்தியக் கருவியை உருவாக்குவதற்கான பயிற்சியை தந்தை வழி அல்லது உறவினர் மற்றும் தமது பிரதேசத்திற்குரிய சுதேச கலைஞர் மூலம் கற்றுக்கொள்கின்றனர். ஏனைய தொழில்களுக்காக வழங்குப்படும் பயிற்சிகள் போன்று வரன்முறையான பயிற்சிகள் எவற்றையும் பெற்றுக் கொள்ளாமை இப்பயில்விலுள்ள தனித்துவமாகும்.

கலை பயில்வை அடுத்த தலைமுறையினரிடம் கையளித்து தொடர்ந்து பேணமுடியாமல் இருப்பது வாத்தியக் கருவி உருவாக்கும் இக்கலைஞர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் அடுத்துக் குறிப்பிடத்தக்கது. இளந்தலைமுறையினர் இவற்றின் பயில்வில் ஆர்வம் காட்டுவதில்லை. பயில்வில் மூத்த உறுப்பினர்களே சமகாலத்தில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றனர். தமது பயில்வை யாரிடம் கையளிப்பது என்பது மூத்த உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினையாக உள்ளது.

## 11. பரிந்துரைகள்

சுதேச கலைஞர்களான பாரம்பரிய வாத்தியக்கருவி உருவாக்கும் கலைஞர் சமகாலத்தில் அவர்களின் கலைச் செயற்பாட்டைத் தொடர்வதில் மேற்குறித்த பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அப்பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

### I. தொழில் திணைக்களத்தில் பாரம்பரிய கைத்தொழிலாளராகப் பதிவு செய்தலும் வர்த்தக சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்தலும் :

பாரம்பரிய தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்கள் அவர்களுக்குள் இணைப்பை ஏற்படுத்தாமல் சுயாதீனமாக கலைத் தொழிலாளர்களாகவே செயற்படுகின்றனர். இவர்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாகச் செயற்படாமை அவர்கள் எதிர்கொள்ளும் அனேகமான பிரச்சினைகளுக்கான அடிப்படை காரணமாக விளங்குகின்றது. தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பதிவு செய்யப்பட்ட அமைப்பாக உருவாகி, அவர்களுக்குள்ளே இணைப்பை ஏற்படுத்துவார்களாயின் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகயளில் அனேகமானவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதனால் பிரதேசத்தில் உள்ள வர்த்தக சமூகத்துடன் இணைந்து செயற்படகூடிய வசதி ஏற்படும். இது உற்பத்திக்கான ஆரோக்கியமான சந்தையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும். உற்பத்தியை நாட்டின் பல பாகங்களுக்கும் பரவலாக்கம் செய்து விற்கக் கூடிய சூழ்நிலை உருவாக்க முடியும். உற்பத்திக்கான சமூக, அரச, வர்த்தக நிறுவனங்களின் அங்கிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியும். உற்பத்திக்கான மூலப்பொருட்களைப் பெறுதல், சந்தைப்படுத்தலில் எதிர்கொளும் பிரச்சினைகளைத் சட்டரீதியாக அணுகக்கூடிய வாய்ப்பையேற்படுத்தும். தொழில்துறையை மேம்படுத்துவதற்காக அரச, தனியார், வர்த்தக நிறுவனங்களில் இருந்து மானியங்களையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் அரச, தனியார் நிறுவனங்கள், வங்கிளின் ஊடாக கடன் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம். கலைத்தொழிலை சிறப்பாக முன்னெடுப்பதற்கான பயிற்சிகள் புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்கக்கூடிய வாய்ப்புக்களும் ஏற்படும்.

### II. சந்தைப்படுத்தலில் கையாளப்படும் நுட்பங்கள் :

வாத்தியக் கருவிகள் விற்பனை நிலையங்கள் நாட்டின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. இவ்விற்பனை நிலையங்களில் மட்டக்களப்பு கலைஞர்களினால் உற்பத்தி செய்யப்படும் தோல்வாத்தியக் கருவிகளையும் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் போது இது

இவ்வாத்தியக் கருவிகளுக்கான ஒரு சிறந்த விளம்பரமாகவும் சுதேச கலைஞர்கள் சந்தைப்படுத்தலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குரிய தீர்வையும் வழங்கும்.

தேசிய அளவில் சுதேச கலைஞர்களினால் உற்பத்தி செய்யப்படும் கலைப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிச் சந்தையை உருவாக்கி அதில் பாரம்பரிய தோல்வாத்தியக் கருவிகளின் கண்காட்சி, விற்பனை என்பவற்றுக்கு தனியிடம் வழங்குதல். இது உள்நாட்டு, வெளிநாட்டு கலைஞர்கள், பொதுமக்கள், மற்றும் அரச, தனியார் அமைப்புக்களின் கவன ஈர்ப்பை சுதேச கலைஞர்களின் படைப்புக்களில் ஏற்படுத்தி உற்பத்திக்கான சந்தை வாய்ப்பை அதிகரிக்கும்.

இலங்கையில் உல்லாசப் பயணத் தொழில்துறை சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. சுதேச உற்பத்தியாளர்கள் விற்பனைக் கண்காட்சிச் சந்தையை ஸ்தாபித்து செயற்படுவார்களாயின் உல்லாசப் பயணிகளினால் பார்வையிடும் இடங்களில் ஒன்றாக சுதேச உற்பத்திகளின் விற்பனைச் சந்தையை பதிவு செய்து கொள்ளலாம். இது அவர்களின் உற்பத்திக்கு சர்வதேச சமூகத்தின் பார்வைக் குவிப்பை ஏற்படுத்தும்.

பிரபல்யக் கலைஞர் பயன்படுத்தும் கலைப் பொருட்களுக்கான சந்தை ஆரோக்கியமானதாக விளங்குகின்றது. பாரம்பரிய தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர்கள் அவர்களின் உற்பத்திப் பொருட்களுடன் பிரபல்யக் கலைஞர்கள் பயன்படுத்தும் தோல்வாத்தியங்களையும், ஏனைய கலைப் பொருட்களையும் மேலதிகமாக உற்பத்தி செய்யும் திறனை வளர்த்து அவற்றை உற்பத்தி செய்யும் போது கலைப் பொருட்கள் உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். இதனை பரீட்சாத்தமாக சில கலைஞர்கள் மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ளதாக நேர்காணலின் போது குறிப்பிட்டனர் (முருகப்பர் கார்த்திகேசு, மகிழவெட்டுவான்). இது அவர்களின் கலைத்தொழிலை விரிவுபடுத்துவதற்கும் வாழ்வாதாரத்தை மேன்படுத்துவதற்கும் உரியதொரு முறையாக அமையும்.

இவற்றைச் சந்தைப் படுத்தல் தொடர்பாக கையாளப்படும் நுட்பமாகக் கொள்ளலாம். இவை பாரம்பரிய தோல்வாத்தியக் கருவி உருவாக்குணர்களின் விற்பனையை அதிகரிக்க உதவும்.

### III. பாரம்பரிய வாத்தியக்கருவிகளின் பயன்பாட்டை ஊக்குவித்தல் :

தமிழ் மக்கள் அவர்களின் சமூக நிகழ்வுகள் பண்பாட்டு விழாக்களில் மேலைத்தேச பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் “பண்ட்” (Band) வாத்திய இசை, மற்றும் நாதஸ்வரத்துடன் மேள இசை என்பவற்றையே பயன்படுத்துகின்றனர். தமிழ் மக்களின் பண்பாட்டின் அடயாளமாகத் திகழும் பாரம்பரிய வாத்தியக் கருவிகளின் பயன்பாட்டை

ஊக்குவிக்காமை தமிழர் மக்களின் வாழ்வியல் சூழலில் காணக்கூடிய ஒரு பின்னடைவான விடயமாக விளங்குகின்றது. இவ்விடயத்தில் சிங்கள சமூகத்தினர் அவர்களின் சமூக விழாக்களில் அவர்களின் பாரம்பரிய வாத்தியங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் நாதஸ்வரத்துடன் இணைந்த மேள இசை, வண்ட வாத்திய இசை என்பவற்றுக்கு மாற்றீடாக "பண்பாட்டு இன்னியணி" என அழைக்கப்படும் பல்வேறுபட்ட வாத்தியங்களின் ஒலிப்பின் பின்னணியில் மேற்கொள்ளப்படும் ஒரு ஆடல் வடிவத்தை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 12. முடிவுரை

பாரம்பரிய தோல்வாத்தியக் கருவிகள் மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டில் முக்கியமானதொரு பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கின்றது. இத்தோல்வாத்தியக் கருவி உருவாக்கம், அதன் பாவனை என்பவற்றில் தோல்வாத்தியக் கருவி உருவாக்கும் கலைஞர் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இது பாரம்பரிய தோல்வாத்தியங்களின் உருவாக்கத்திற்கு சவாலாக உள்ளது. ஆய்வாளரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் பாரம்பரிய தோல்வாத்தியக் கருவிகளினதும் கலைஞர்களினதும் இருப்பை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும். பாரம்பரிய தோல்வாத்தியக் கருவிகளின் உருவாக்கமும் அதன் பயன்பாடும் ஆரோக்கியமானதொன்றாக விளங்கும் போது இவ்வுற்பத்தியில் இளந்தலைமுறையினரின் ஈடுபாடு இயல்பாகவே அதிகரிக்கும். அவர்கள் எதிர்கொண்ட பல்வேறுபட்ட சவால்களில் இருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும்.

### உசாத்துணை நூல்கள்


1. கந்தையா, வீ. சி. (1964), **மட்டக்களப்புத் தமிழகம்,** யாழ்ப்பாணம்: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்.

2. சிவத்தம்பி, கா., (2004), **பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்,** மொழிபெயர்ப்பு அம்மன்கிளி முருகதாஸ், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்,

3. ஜனார்தனி, தா., (2012)**அம்பலாங்கொடை அரும்பொருட் காட்சியகம் ஓர் ஆய்வு,** இளம் நுண்கலைமானி கட்புல பட்டத் தேர்வின் ஒரு பகுதியாக சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கை நிறுவனம்: கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு.

4. **Fauna and Flora Protection**, Chapter 567, Published as a Supplement to Part II of the Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka, http:// www. commonlii.

org/ lk/ legis /consol_act/fafp567290.pdf, 10.07.2018.

5. Marcie Rendon, Ann Markusen., (2009), **Native Artists: Livelihoods, Resources, Space, Gifts**, University of Minnesota: Arts Ecomomy Initiative.

**நேர்காணல்**

1. ஐயம்பிள்ளை, ஞானசேகரம்., பறையடித்தல், பறை உருவாக்கும் கலைஞர், மீன்வியாபாரம், கல்வி – 05, வயது 38, களுதாவளை – 04, களுவாஞ்சிகுடி, 12.05.2018.

2. கதிர்காமன், இளையதம்பி., தோல்வாத்தியக் கருவிதயாரித்தல், மீன்பிடி, தோல்வாத்தியக் கலைஞர், வயது 67, படிக்கவில்லை, மகிழவெட்டுவான், ஆயித்தியமலை, 11.05.2018.

3. தம்பிமுத்து,க., அண்ணாவியர், விவசாயம், சேனைப் பயிர்ச்செய்கை, 68 வயது, படிக்கவில்லை, சித்தாண்டி – 03, 20.05.2018.

4. பரசுராமன்,கா., பறையடித்தல், வயது 73, களுதாவளை – 04, 09.05.2018.

5. முருகப்பர், கார்த்திகேசு., விவசாயம், அண்ணாவியார், தோல்வாத்தியக் கருவிகள் உருவாக்குதல், வயது : 67, கல்வி : 2 ஆம் வகுப்பு, கிழவெட்டுவான், ஆயித்தியமலை, 11.06.2018.

6. பாலிப்போடி, லோகேஸ்வரன்., ஆசிரியர், கூத்துக் கலைஞர், வயது 40, கல்வித் தரம் க. பொ. த. உ. தரம், மகிழவெட்டுவான், ஆயித்தியமலை, 11.05.2018.